மென்பதோடுகூட, இயக்குநரகத்திற்கு ஆயிரக்கணக்கான பள்ளிகளிலேயிருந்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டு நீண்டகாலமாக அவைகள் பைசல் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, இடைக்காலத் திட்டமாவது தீட்டி நிதியுதவி வங்கியிலிருந்து கிடைப்பதற்கு முன்னால் இந்த ஆண்டு கல்வித் துறைக்கு அதிகமான அளவிற்குப் பணம் ஒதுக்கி, பள்ளிக் கட்டிடங்களை இந்த ஆண்டு கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்ஜட்டிலே வரவேண்டியதை இப்போதே கேள்வியாக நீங்கள் கேட்க நான் பதில் சொல்லக்கூடிய நிலையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே காரணத்திற்காக எல். ஐ. சி. நிறுவனத்திடமிருந்தும் நிதியாதாரம் கேட்கப்பட்டதே, அது பலன் அளித்ததா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எல். ஐ. சி. யிடமும் அணுகி அவர்களும் தருவதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். இது ஒரு முக்கியமான குறைபாடு. மத்திய அரசு கல்விக்காக செலவு செய்வதை ஒரு மூலதனமாக என்றைக்குக் கருதுகிறார்களோ, அன்றைக்குத் தான் இந்தப் பிரச்சினையில் சரியான முடிவு ஏற்படும். இப்போது உலக வங்கி போன்ற நிறுவனங்களிலும் கூட, கல்விக்கு செலவு செய்வதை சிறந்த மூலதனம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உலகிலே உள்ள பல்வேறு நாடுகளிலும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மனித சக்தியை வளப்படுத்துவது மிக முக்கியமான செலவு, மிக முக்கியமான மூலதனம் என்ற இந்தக் கருத்தை மத்திய அரசு ஒரு கொள்கையாக ஏற்றுக் கொள்ளுமானால் அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வை நாம் காண முடியும். அதையும் நாம் வற்புறுத்தி நமக்குக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலே எல்லாம் சொல்லி வருகிறோம்.

அரசு உயர்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள்

*வினா எண். 66 திரு. பெ. சு திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1983 ஜனவரி 31,]

(அ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளியாக் மாற்றி அங்கு பணியாற்றும் ஆசிரியர்களை 1—4—1970 க்கு பிறகு பதவி உயர்வு (பட்டதாரி ஆசிரியர்) கொடுக்கும் போது பணிக்காலம் முழுமையும் கணக்கிடப்படாமல் இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம்எனில் அதன்மீது அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்படும் போது அடிப்படை விதி எண். 130 ஐ அடிப்படையாகக் கொண்டு, அவ்வகுப்பு ஆசிரியர்கள் அரசுப் பணியேற்கும் நாளிலிருந்து அவர்கள் முன்னுரிமை நிர்ணயிக்கப்படுகின்றது. எனவே இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஏற்கெனவே நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏறக்குறைய அரசாங்கப் பள்ளிகளாகத்தான் நடைபெற்றிருந்தன. அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு வருகின்றபோது பதவி உயர்வு கொடுக்கின்ற காலங்களில் அவர்களுடைய சர்வீசை கணக் கிடாமல் இருந்ததால் பல பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே, இதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது இதுவரையில் இருந்து வருகின்ற நடைமுறை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பணியாற்றியவர்களாக இருந்து, அந்த ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி. உயர்நிலைப் பள்ளியாக ஆகின்றபோது யார் யார் அந்த உயர்நிலைப் பள்ளகளிலே சேருகிறார்கள் என்று பார்த்து, அந்த விருப்பத்தை அறிந்து, அவர்களைச் சேர்த்து அவர்களை இந்த விதி எண். 130—ன் அடிப்படையில், என்றைக்குச் சேருகிறார்களோ அன்றிலிருந்தே, அந்தப் பழைய காலத்தை நாம் வரையறை செய்து வருகின்றோம். இப்போது இருக்கின்ற பிரச்சினை எல்லாம் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கி இருக்கிறோம். ஆகவே அவர்களுடைய பிரச்சினை சம்பந்தப்பட்ட முறையில் விதிகள் உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த விதிகள் உருவாக்கப்பட்ட பிறகு அவர்களுடைய நிலைமை என்ன, இந்த விதிகள் உருவாக்கப்படுவதற்கு முன்னாலே சேர்க்கப்பட்டவர்கள் யாரேனும் பாதிக்கப்பட்டிருக் கிறார்களா என்று பார்த்து பிறகுதான் இது பற்றி இறுதி முடிவை நாம் எடுக்க முடியும்.

திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற நடைமுறையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்- இந்த நடுநிலைப்பள்ளிகளை எல்லாம் அரசாங்கப் பள்ளிகளாக சென்ற ஆண்டு முதல் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாறினால் இந்த விதி உடனடியாக மாற்றப்படுமா? அல்லது இப்போது இருக்கின்ற ஏற்பாடு இதற்கு ஒத்து வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களான உடனே அவர்களுடைய நிலைமை என்ன என்பதைக் குறித்த விதிகள்தான் இப்போது பரிசீலிக்கப்படுகிறது, இந்த விதிகள் வந்த உடனே இந்தப் பிரச்சினையிலே சரியான தீர்வு காண முடியும்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே நடுநிலைப் பள்ளிகள் அரசுடைமை ஆக்கப்பட்ட பிறகு, செகன்டரிகிரேடு ஆசிரியர்களாக இருந்தவர்கள் பட்டதாரிகளாக மாறி வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டிய நிலையில் கிடைக்காமல் இருப்பது பற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அப்படி வந்த பின்னரும், அங்கே காலி இடங்கள் இருந்தும் இப்படிப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க அரசாங்கம் உடனடியாக ஆணையிட முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் அரசு அலுவலர்களாக ஏற்கப்பட்டு விட்டார்கள். ஆனால் அவர்களுடைய பணி சம்பந்தப்பட்ட விதிகள் இன்னும் இறுதியாக்கப் படவில்லை. அது இறுதியாக்கப் பட்ட பிறகுதான் அவர்களுடைய பதவி உயர்வு அல்லது அவர் களுடைய பணி மூப்பு போன்ற நிலைகளில் எல்லாம் ஒரு தெளிவை நாம் ஏற்படுத்த முடியும்.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, இதேபோன்ற பிரச்சினை முன்னாலே ஜில்லாபோர்டு பள்ளிகள் அரசுடைமை யாக்கப்பட்டபோது ஏற்பட்டது. அதேபோன்று இந்தப் பிரச்சினைகளிலேயும் காலதாமதம் ஏற்படுத்தாமல்—அவர்கள் எங்கே பணியாற்றினாலும் அவர்கள் தொடர்ந்து ஆசிரியர் களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்—அந்த இடை வெளியைக் குறைத்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து இந்தப் பட்டதாரி ஆசிரியர்களை அரசுப் பணியில் உடனடியாக எடுத்துக் கொள்வது போன்ற நடவடிக்கைகளை எடுத்து கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1983 ஜனவரி 31]

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளை உருவாக்குகிறபோது இப்படிப்பட்ட யோசனைகளையெல்லாம் அவர்கள் வைத்து, ஆலோசித்துத்தான் முடிவு எடுக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டிலிருந்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, அரசு உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றியதால் எத்தனை ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் இப்போது இல்லை. ஆனால் இந்த ஆண்டு நாம் 5-க்கும் குறைவாகத்தான் உயர்த்தியிருக்கிறோம்.

கூட்டுறவுச் சங்கங்களில் பினாமி பெயரில் பெறப்பட்டுள்ள கடன்கள்

*வினா எண் 67—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் எத்தனை கூட்டுறவு சங்கங்களில் பினாமி பெயரில் எவ்வளவு கடன்கள் பெறப்பட்டுள்ளது?

(ஆ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) தமிழகம் முழுவதும் 101 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் 45.38 இலட்ச ரூபாய் அளவிற்கு பினாமிக் கடன்கள் பெறப்பட்டு உள்ளது.

(ஆ) பினாமிக் கடன்கள் மீது தாவா நடவடிக்கை, நிறைவேற்ற மனு நடவடிக்கை, தண்டத் தீர்வு நடவடிக்கை, தமிழநாடு கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்து கோர்ட்டில் வழக்குகள் தொடர்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பினாமி பெயரால் வழங்கப்பட்ட கடன்களை திரும்பப் பெறமுடியாத காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படமுடியாமல் இருக்கின்றன. ஒருசிலருக்கு தவறான முறையில் பினாமி கடன்களைக் கொடுத்த அதிகாரிகள் மீது